
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1287

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

69

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

திட்டத்தை முடக்கியது, ஏழை எளிய கிராமப்புற மக்களின் பொருளாதார வாழ்வாதாரத்தை நசுக்கும் செயல்" என்று தொடர் அறிக்கைகள் வாயிலாகவும், மக்கள் மத்தியில் கொண்டுசென்றார் கலைஞர்.

2006-2011-ஆம் ஆண்டுகளில், முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப் பட்ட 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்', இப்படி 2011-முதல் 2021-ஆம் ஆண்டு வரை தொய்வடைந்த நிலையில், தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற நம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அதனைப் புத்துயிர் அளித்து செயல்படுத்தத் தொடங்கியது. ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே கிராமப்புறக் கட்டமைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்து, இந்தத் திட்டத்தை மீண்டும் கையில் எடுத்தார்.

### 10 ஆண்டுகள் இடைவெளி

கிராமப்புற வளர்ச்சியின் மீதான அக்கறை கிராம மக்களின் தேவைகளை அறிந்து, அவர்களின் முன்னுரிமைகளுக்கு ஏற்ப பணிகளை மேற்கொள்ளும் வகையில், இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

தவிர, சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் மூலம் மக்களின் தேவைகள் கேட்டறியப்பட்டு, எந்தெந்தப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்டது. இதன்மூலம் கிராம வளர்ச்சி என்பதை, கிராம மக்களின் கோரிக்கைகளுடன் இணைத்தது திராவிட மாடல் அரசு. ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளையும் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவரும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20 சதவிகித கிராம ஊராட்சிகள் தேர்வுசெய்யப்பட்டன. 2021-22-ஆம் ஆண்டில் 2,657 கிராம ஊராட்சிகளும், 2022-23-ஆம் ஆண்டில் 2,544 கிராம ஊராட்சிகளும், 2023-24-ஆம் ஆண்டில் 2,504 கிராம ஊராட்சிகளும் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதன்மூலம் ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் வளர்ச்சியைச் சுருக்காமல், தமிழ்நாட்டின் அனைத்து கிராமங்களையும் படிப்படியாக வளர்ச்சிப் பாதையில் இணைத்தது கழக அரசு.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, 2021-22ஆம் ஆண்டில் ரூ.1,455 கோடி, 2022-23-ஆம் ஆண்டில் ரூ.1,155 கோடி, 2023-24-ஆம் ஆண்டில் ரூ.1,148 கோடி என நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. ஐந்து ஆண்டு காலத்தில் ஆண்டுக்கு சராசரியாக, சுமார் ரூ.1,200 கோடி என்ற அளவில், நிதி ஒதுக்கீடு செய்தது, திராவிட மாடல் ஆட்சி. இந்தத் திட்டத்தின்மூலம் கிராம மறுமலர்ச்சி என்பது கிராம மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் முயற்சியாக மாற்றப்பட்டது.


இந்தப் பணிகள் அனைத்தும் கல்வி, சுகாதாரம், மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளப்பட்டன. ஒரே கிராமத்தில் பல துறைகளின் வளங்களையும் திட்டங்களையும் ஒருங்கிணைப்பதன்மூலம் முழுமையான வளர்ச்சியை உருவாக்கும் அணுகுமுறையைக் கடைப்பிடித்தது நம் அரசு. குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கும் வளர்ச்சியின் பலன்கள் சென்றடைய வேண்டும் என்பதற்காக, குறைந்தபட்சம் 30 சதவிகித நிதியை அந்தப் பகுதிகளுக்குச் செலவிடும் வகையில், முன்னுரிமை அளிக்கப்பட்டது.

ஒரு குளம் தூர்வாரப்படும்போது, அது வெறும் மண் அகற்றும் பணியாக மட்டும் இருப்பதில்லை; அது விவசாயியின் எதிர்காலத்துடன் தொடர்புடையதாகிறது. ஒரு சாலை அமைக்கப்படும்போது, அது வெறும் போக்குவரத்து வசதியாக மட்டும் இருப்பதில்லை; பள்ளிக்குச் செல்லும் குழந்தையின் பாதுகாப்பான பயணத்துடன் தொடர்புடையதாகிறது. ஒரு பள்ளி மேம்படுத்தப்படும்போது, அது அடுத்த தலைமுறையின் கனவுகளுடன் தொடர்புடையதாகிறது. ஒரு மயானம் அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படும்போது, அது மனித கண்ணியத்துடன் தொடர்புடையதாகிறது. அந்த வகையில், 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்பது கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் நேரடியாக மாற்றத்தைக் கொண்டுவந்தது.

வளர்ச்சி என்பது சிலருக்கு மட்டுமல்ல, அது எல்லோருக்கும் சேர வேண்டும் என்றுதான், 'எல்லோருக்கும் எல்லாம்' என்கிற சமூக நீதிக் கொள்கையைச் செயல்படுத்தின, நம் ஆட்சிக்காலங்கள். அந்த வகையில், 1996-ஆம் ஆண்டில் கலைஞர் கொண்டு வந்த கனவுத் திட்டம், 2026-ஆம் ஆண்டுவரை அண்ணாவின் பெயரில் கிராமங்களின் அடையாளங்களை மாற்றின என்றால், மிகையில்லை.

...தொடரும்

ஓவியம் : ரவி பேலட்



# கிராமங்கள் விழித்தெழட்டும்! அண்ணா பெயர் நிலைக்கட்டும்!

தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது மாநகரங்களில், நகரங்களில் மட்டுமல்ல, கடைக்கோடி கிராமங்களிலும் எட்டியுள்ளது. கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. நகரங்களுக்கும் கிராமங்களுக்குமான இடைவெளி குறைந்து, வளர்ச்சியின் பயன் அனைத்து மக்களையும் சென்றடைந்துள்ளது என்றால், அதற்குக் காரணம், 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' ஏற்படுத்தியிருந்த அடித்தளம். 2011-ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அம்மையார் ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர் ஆனபோது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறுத்தியதுடன், அதற்குப் பதிலாக 'தாய்த் திட்டம்' (Tamil Nadu Habitations Improvement Scheme - THAI Scheme) என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

அண்ணா பெயரிலான திட்டத்தை முடக்கியவர், அந்தத் திட்டத்துக்குத் தனது பெயரைச் சூட்டிக்கொள்ள முனைந்தார். மேலும், புதிதாகத் தொடங்கப்பட்ட திட்டத்தில் கிராம ஊராட்சித் தலைவர்களின் அதிகாரமும் ஊராட்சிகளின் தன்னாட்சித் திறனும் குறைக்கப்பட்டது. தவிர, திட்டத்தை மாற்றியதால், ஏற்கெனவே பாதியில் நின்ற நூற்றுக் கணக்கான கட்டுமானப் பணிகள், நிதிப் பகிர்வு மாறுபாட்டால் அப்படியே முடங்கி விட்டன. இதனால், மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டது. அதே காலகட்டத்தில்தான் அண்ணா நூற்றாண்டு நூலகம் முடக்கம், தலைமைச் செயலகத்தை மாற்றுவது எனப் பல குளறுபடிகளை ஏற்படுத்தினார் அம்மையார். சட்டமன்றத்தில் போராட்டம், ஆர்ப்பாட்டங்கள், சட்டப்போராட்டம் எனக் கழகத்தின் போராட்டம் ஒருபக்கம்,

"பேரறிஞர் அண்ணாவின் பெயரிலான யும், மாநிலத்தின் வளர்ச்சி கடைக்கோடி மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற அண்ணாவின் கனவினை, கலைஞர் கொண்டு வந்த திட்டத்தினை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற அவரது உறுதியும்தான், பத்தாண்டுகளாக முடங்கிய திட்டத்தினைத் தூசு தட்டியது.

2021-22-ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளையும் ஒவ்வொரு கட்டமாக மேம்படுத்தும் வகையில், திட்டம் வடிவமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில், கிராம ஊராட்சிகளும் அவற்றின் கீழ் ஏராளமான குக்கிராமங்களும் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவைகள் ஒன்றாக இருப்பதில்லை. ஒரு கிராமத்திற்கு சாலை முக்கியத் தேவையாக இருக்கலாம், இன்னொரு கிராமத்திற்குக் குடிநீர் அல்லது நீர்நிலைப் புனரமைப்பு அவசியமாக இருக்கலாம். சில இடங்களில் பள்ளிக் கட்டமைப்பு தேவைப்படலாம்; எனவே, எல்லா கிராமங்களுக்கும் ஒரே மாதிரியான பணிகளைச் செய்வதற்குப் பதிலாக, அந்தந்த

> "வளர்ச்சி என்பது சிலருக்கு மட்டுமல்ல, அது எல்லோருக்கும் சேர வேண்டும் என்றுதான், 'எல்லோருக்கும் எல்லாம்' என்கிற சமூக நீதிக் கொள்கையைச் செயல்படுத்தின, நம் ஆட்சிக்காலங்கள்."

## ஆணவத்துக்குப் பெயர், அன்பு வழியா?

தமிழ்நாடு சட்டமன்றத்தில், பட்ஜெட் உரையின்போது நிதியமைச்சர் மரிய வில்சன், தமிழ் உச்சரிப்பு மற்றும் இலக்கணப் பிழைகளுடன் பேசியதை, இணையவாசிகள் கடுமையாக விமர்சித்துவருகின்றனர். இது தொடர்பாக, கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன் சுட்டிக்காட்டியபோது, "எனக்கு இப்படித்தான் பேசத் தெரியும், என்னால் மாற்ற முடியாது" என்று அமைச்சர் ஆவேசமாகப் பேசியதும், இணையவாசிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மாநிலத்தின் நிதியமைச்சராக இருப்பவர், பொது அவையில் விமர்சனங்களை எதிர்கொள்ளும்போது காட்டிய கோபமும் நாகரிகமற்ற வார்த்தைகளும் அவரது தகுதிக்கு அழகல்ல எனச் சமூக வலைதளங்களில் கருத்துகள் பதிவிடப்பட்டுவருகின்றன.

விவாதத்தில் பேசிய அவர், தான் சிறுபான்மைச் சமூகம் எனப் பேசியதும், எனக்கு அன்புவழிதான் தெரியும் எனப் பேசியதற்கும் அவரது முரண்பாடான நடவடிக்கைகளை ஒப்பிட்டுவருகின்றனர்.

2026-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது, அமைச்சர் மரிய வில்சன் குடும்பத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வன்முறையாக நடந்துகொண்ட பழைய வீடியோக்கள், தற்போதைய சம்பவங்களுடன் சேர்த்து மீண்டும் சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டுவருகின்றன. குறிப்பாக, அது தொடர்பான வழக்கில், அவர் நேரில் ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளின் நகல்களும் செய்திகளும் பகிரப்பட்டுவருகின்றன.

குற்ற உணர்வு கொள்ளவேண்டிய ஒரு விஷயத்துக்கு, பெருமிதப்படவேண்டிய ஒன்றை செய்துவிட்டதைப் போல, 'அப்படித்தான் பேசுவேன்' என்கிறார். இந்தப் போக்கினைக் கண்டிக்க வேண்டும் எனவும் மக்கள் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



### தேர்தலுக்கு ஆதரவளித்த சங்கங்கள்!



பா.பாலஉமாபதி

2015-ஆம் ஆண்டு இறுதியில், சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களை, முன்னாள் அமைச்சர் கே.பி.பி.சாமி அவர்கள் தலைமையில் பல்வேறு நலச்சங்கங்களின் கூட்டமைப்பினர் சந்தித்து, கழகத்துக்கு ஆதரவைத் தெரிவித்தனர். அப்போது, தகவல் தொழில்நுட்ப அணியில் ஆர்வத்துடன் பணியாற்றிக்கொண்டிருந்த நான், அவர்களை ஒருங்கிணைத்து அழைத்துவந்தேன். எங்களுடன் தலைமைக் கழகப் பேச்சாளர், சிவாஜி கிருஷ்ணமூர்த்தியும் உடன் இருந்தார்.

– பா.பாலஉமாபதி, மாவட்டத் துணை அமைப்பாளர், சென்னை வடகிழக்கு மாவட்டச் சுற்றுச்சூழல் அணி, திருவொற்றியூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 30 ஆயிரம் பேர் பேரணி!

1962-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள், விலைவாசி உயர்வால், மக்கள் படும் அவதியை எடுத்துக்காட்டவும், விவசாய உற்பத்திக்கான பொருள்களின் விலையைக் குறைக்கவும், புது வரிகளைக் கண்டித்தும், தமிழ்நாடெங்கும் ஊர்வலமாகச் சென்று, கண்டனக் கூட்டங்களை நடத்தியது கழகம். முன்னதாக, ஜூன் 30-ஆம் தேதி தலைமைச் செயலகத்தின் முன் சுமார் 30 ஆயிரம் பேர் திரண்ட பேரணியை, காலை 8 மணி முதல் 11 மணி வரை நடத்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900